TAMIL NADU LEGISLATIVE
2 0 AUG 1980
MADRAS-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1980 பிப்ரவரி 7

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் 1. திரு. பி. ஜெயராமன், 2. திரு. எம். கன்னியப்பன் ஆகியவர்களின் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. பி. ஜெயராமன் அவர்கள் 25-1-80 ஆம் தேதியன்றும், திரு. எம். கன்னியப்பன் அவர்கள் 5-2-80 ஆம் தேதியன்றும் மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

1967 ஆம் ஆண்டிலிருந்து 1971 ஆம் ஆண்டு வரை திரு. பி. ஜெயராமன் அவர்கள் வட ஆற்காடு மாவட்டம் பெரணாம்பட்டுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரை திரு. எம். கன்னியப்பன் அவர்கள் சென்னை துறைமுகத் தொழிலாளர் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும் இரங்கலையும் இப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)